**வாழ்த்துரைக்கு...!**
ரசனை
ரம்மியம்
வீரியம்
விளைந்தியம்
வாழ்வியல்
வாழ்ந்தியல்
வாய்ப்பியல்
வாய்த்தயியல்
சூழ்யியல்
சூழ்ந்தயியல்
நிலையியல்
நிலைத்தயியல்
கனவியல்
கண்டதியல்

அனைத்தையும்
அளந்து
சொல்லும் வாழ்த்துரை!
**மு.ஜெயசங்கர்** (28-05-2020)



**இனிய நண்பர் கவிஞர் கு.ப.அசோகன் அவர்களின் பணிநிறைவுப் பாராட்டு.**
....,................................
அன்பிற்கினிய நண்பர்
ஆற்றலுக்கு இலக்கணமாம்
இன்முகம் வாடாமல்
ஈந்துவக்கும் பண்பாளர்
உற்றநண்பன் என்றே
ஊரே போற்றிடுமே
என்றைக்கும் சோர்வறியா
ஏற்றமிகு ஊற்றுக்கண்
ஐயமென்று வருவோரை
ஒருமித்து அரவணைத்து
ஓங்கியக் குரலாலே
ஔடதம் படைத்திட்டார்
"சுங்கமுரசு" கண்டெடுத்து
ஓங்கி ஒலிக்கவிட்ட
எங்கள் தங்கமகன்
மங்களத்தூண் அசோகன்.
**ச.கலியமூர்த்தி!** 28-05-2020

